அப்படி இல்லையென்றால் தாட்கோ அதிகாரிகள் மூலமாக அந்தச் சங்கத்தை இயக்க வேண்டுமே தவிர, அப்படியில்லாமல் தனியார் துறையிலே கொடுத்தால் அது சரிவர இயங்காது. ஆகவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு ஆராய்ந்து, இந்த சொசைட்டியை அரிஜனங்கள் மூலமாக இயக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய நிர்வாகத்திற்காக ஸ்பெஷல் ஆபீஸர் ஒருவரை நியமித்திருக்கிறோம். மேற்படி தவறுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் கொடுத்தால் அரசு தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு துணை வினாக்கள் தான் கேட்க முடியும். மூல வினாக் கொடுத்தவர் மூன்றாவது துணை வினாக் கேட்க முடியாது. (குறுக்கீடு)

திரு. எம். முத்தையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோ அதிகாரிகளிடம் பல தடவை முறை யிட்டோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி நன்றாக ஆராய்ந்து தாட்கோ அதிகாரிகளைக் கேட்டு எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தாட்கோ நிர்வாகத்தினரை அணுகி விவரத்தைக் கேட்டு கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகை.

* 754 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோவியத் நாட்டில் மருத்துவக் கல்வி பயின்ற தமிழக மாணவர்கள் இங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களாக (House Surgeon) இருக்கும்போது உதவித் தொகை வழங்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அம் மருத்துவர்கள் உதவித் தொகையின்றி பயிற்சி பெறும் திட்டத்தின்கீழ் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டமையால், அவர்களுக்கு உதவித் தொகை வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் சென்ற ஆண்டு குறுகிய கால வினாவாகக் கேட்ட கேள்வி. ஓராண்டு காலம் கழித்தும் அதே பதில் வருகிறது. பொதுவாக வெளி நாடுகளில் படிக்கின்ற மாணவர்களைப் பற்றி ஒரு அபிப்பிராயம் உண்டு. பணக்கார வீட்டுப் பிள்ளைகள்தான் வெளிநாடுகளுக்குப் போய் படித்துவிட்டு வருவார்கள் என்று. ஆனால் சோவியத் யூனியனைப் பொறுத்த வரையில் நம்முடைய நாட்டிலிருந்து பரிவர்த்தனை அடிப்படையில் தகுதி அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்கிறார்கள். மேலும் அங்கே படித்த மாணவர்கள் அங்கேயே பணியாற்றுவதில்லை. நம்முடைய நாட்டிற்கு வந்துதான் பணியாற்றுகிறார்கள். நம்முடைய நாட்டிலே மருத்துவக் கல்லூரியில் பயில வேண்டுமென்றால் ஒரு இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் என்று ஒரு மாணவருக்கு அரசு செலவிடுகிறது. அந்தச் செலவுத் தொகை எதுவும் இல்லாமல் அந்த அரசாங்கத்தின் செலவிலேயே படித்துவிட்டு வருகிற மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்க இயலாது என்பது முறையல்ல. அவர்கள் மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள். எனவே அதை மீண்டும் மறு பரிசீலனை செய்து, அங்கே படித்துவிட்டு வருகின்ற இந்த மாணவர்களுக்கும் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கேள்வி கேட்டாலும், இந்த ஆண்டு கேள்வி கேட்டாலும் பதில் ஒன்றுதான். சி.ஆர்.ஆர்.ஐ. என்ற அடிப்படையில் வழங்கப்படுகிற உதவித் தொகை தமிழ்நாட்டிலே படிக்கின்ற மாணவர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. அதிலும் எ.ஆர்.ஆர்.ஐ. என்பது எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. சி.ஆர்.ஆர்.ஐ. படித்தால்தான் சிம்.பி.பி.எஸ். பட்டமே வழங்கப்படுகிறது தமிழகத்தில்.

1990 ஏப்ரல் 26]

ஆனால் ரஷ்யா போன்ற மேலைநாடுகளில் பட்டப் படிப்பை முடித்ததற்குப் பிறகுதான் அவர்கள் இங்கே வந்து சி.ஆர்.ஆர்.ஐ. என்பதை அவர்களுடைய வசதியாகப் படிக்கிறார்கள். அவா கள் அதைப் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆகவே உதவித் தொகை வழங்க வேண்டிய அவசியம் இல்லை. அதே நேரத்தில் வெளி மாநிலத்தில் படித்தவர்கள் கூட இந்த சி.ஆர்.ஆர்.ஐ. படிக்க வேண்டும் என்று சொன்னால் உதவித் தொகை இல்லாமல்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான், உதவித் தொகை வழங்குவதில்லை என்ற அடிப்படையில்தான் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதனால்தான் சொன்னேன். மற்ற வெளிநாடுகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும், சோவியத் நாட்டில் படித்துவிட்டு வருகின்றவர்களுக்கும் வேறுபாடு இருக் கிறது. அமெரிக்காவிலே படித்தவர்கள், இங்கிலாந்திலே படித்தவர்கள், ஸ்விட்சர்லாந்திலே படித்தவர்கள் எல்லாம் நம்முடைய நாட்டிற்கு பணியாற்ற வருவதில்லை. ஆனால் சோவியத் நாட்டிலே படித்தவர்கள் நம்முடைய நாட்டிலேதான் பணியாற்ற வருகிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த வர்கள் என்பதால் தமிழ்நாட்டிலேதான் வந்து பணியாற்று கிறார்கள். இங்கே கூட ஒரு எம்.டி. இருக்கிறார். எம். எஸ். இருக்கிறார். அழகர்சாமி அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அப்படி இருக்கும்போது அரசாங்கத்தினுடைய செலவில் படித்துவிட்டு வந்து நம்முடைய நாட்டிலே பணி யாற்றுகின்ற மாணவர்களுக்கு ஏன் விதியைத் தளர்த்தி உதவித் தொகை கொடுக்கக்கூடாது என்று நான் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரஷ்யாவிற்குச் சென்று படிப்பதே அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு மிகப் பெரிய சலுகை தான். அப்படிப் படிப்பவர்களுக்கு மேலும் ஒரு சலுகை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்பது சரியாக இருக்காது. மேலும் அவர்கள் பட்டப் படிப்பை அங்கேயே பெற்றுவிடுகிறார்கள். சி.ஆர். ஆர்.ஐ. படித்தால்தான் பட்டம் வழங்கப்படும் என்ற கண்டிஷன் அவர்களுக்குக் கிடையாது. நாம் யாருக்கு உதவித்தொகை வழங்குகிறோம் என்று சொன்னால் சி.ஆர்.ஆர்.ஐ. படித்தவர் களுக்குத்தான் பட்டம் வழங்கப்படும் என்ற நிலையில்தான் உதவித் தொகை வழங்குகிறோம். ஆகவே பட்டப்படிப்பைப் பெற்றவர்களுக்கு மீண்டும் உதவித்தொகை வழங்க வழியில்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் நாட்டில் எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு தமிழகத்திற்கு வந்து நிதியுதவியோடு ஹவுஸ் சர்ஜியன் பயிற்சி பெற வேண்டும் என்ற கோரிக்கை இருந்தாலும் கூட அண்டை மாநிலங்களில் இருந்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றுவிட்டு வந்து நம்முடைய மாநிலத்தில் ஹவுஸ் சர்ஜியன் பயிற்சிக்கு மனு செய்கிறபோது இங்கே மறுதலிக்கப்படுகிறது. நிதியுதவி இல்லாமலே படிக்கிறோம் என்று சொன்னாலும் கூட மறுப்பு தெரிவிக்கிறபோது வெளிநாட்டிலிருந்து படித்து விட்டு வருகிற காரணத்திற்காக மட்டும் இவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை கொடுக்கவேண்டும் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கவில்லை என்றுதான் பதில் சொல்லி இருக்கிறேன்.

நடமாடும் தொழுநோய் மருத்துவப் பேருந்து.

* *1701*—**திரு. ஏ. ஜி. சம்பத் :**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதி கிராமங் களில் நடமாடும் தொழு நோய் மருத்துவப் பேருந்து அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10-10 மணி.

திரு. ஏ.ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவி லூர் வட்டத்தில் குறிப்பாக முகையூர் தொகுதியில் தொழு நோயாளிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அரகண்டநல்லூரில் அமைந்திருக்கிற மருத்துவமனைக்கு வந்து செல்வது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. 1971–72–ல் கழக ஆட்சி இருந்த நேரத்தில், இப்படி பேருந்து. அந்த இடத்தில் அமைக்கப்பட்டு, அதிலே மொபைல்ஹாஸ்